**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP.No.78 /2018**

**C/W**

**MCOP No.81/2018**

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | PW4 - கனகரத்தினம் | வயது. | 42 |
| த.பெ. | பழனிசாமி | தொழில். | சொந்த வேலை |
| முகவரி. | ராமயம்பாளையம், அவிநாசி | | |

**ம.சா.4 முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் 3 ம் நபர் ஆவேன். மனுதாரர் தரப்பு 4 ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். எனது பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். விபத்தில் இறந்து போன வினோத்குமார், விபத்தின்போது எங்கள் கம்பெனியில் வேலை செய்து வந்தார். விபத்து சமயத்தில் வினோத்குமார் சர்வீஸ் இன்ஜினியராக எங்கள் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு எங்கள் கம்பெனியில் மாதம் ரூ-14,000/- சம்பளம் கொடுத்தார்கள். அவருடைய சம்பள சான்றிதழை நான் தாக்கல் செய்கிறேன். சம்பள சான்றிதழ் **ம.சா.ஆ. 18** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எங்கள் கம்பெனியின் பதிவு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அது ஆன்லைனில் உள்ளது. தேவைப்பட்டால் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். வினோத்குமாரின் தந்தை சொன்னதின் அடிப்படையில், இன்று வழக்கு விசாரணைக்கு வந்துள்ளேன். எங்கள் கம்பெனியில் மொத்தம் 6 பேர் வேலை செய்கிறோம். ஸ்டெப்லைசர் தயாரிக்கும் கம்பெனி ஆகும். பணியாளர்களுக்கு நாங்கள் அடையாள அட்டை கொடுத்துள்ளோம். அவர்கள் வருகை பதிவேடு பராமரிக்கிறோம். சம்பளத்தையும் பதிவேட்டில் பராமரிக்கிறோம். வருகை பதிவேடும், சம்பள பதிவேட்டையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். நான் சம்பள சான்றிதழில் புரொடக்சன் மேனேஜர் என்றும், என்னுடைய சாட்சியத்தில் சர்வீஸ் இன்ஜினியர் என்றும் முரண்பட்டு குறிப்பிட்டுள்ளேன் என்றால், அவர் பார்க்கும் பணி புரொடக்சன் மேனேஜர்தான். அவர் சர்வீசையும் மேற்பார்வை இடுவதால், நாங்கள்

சர்வீஸ் இன்ஜினியர் என்று பொதுவாக தெரிவிப்போம். சம்பள சான்றிதழில் தேதி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பள சான்றிதழ் விபத்திற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சம்பள சான்றிதழை வைத்து இறந்துபோன வினோத்குமாரின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. சம்பளத்தை மிகை படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K.SureshKumar
Subordinate Judge,
Avinashi.

**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP.No.78 /2018**

**C/W**

**MCOP No.81/2018**

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | PW3 - மகேந்திரன் | வயது. | 28 |
| த.பெ. | லட்சுமணன் | தொழில். | கம்பெனி வேலை |
| முகவரி. | ராமயம்பாளையம், அவிநாசி | | |

**ம.சா.3 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 3ம் நபர் ஆவேன். மனுதாரர் தரப்பு 3ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். எனது பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மை. அதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து ஏற்பட்ட இருசக்கர வாகனத்திற்கு 15 அடி இடைவெளியில் பின்னால் சென்றேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. ஆனால், போலீசார் விசாரித்தார். நான் போலீசாரிடம் கையெழுத்து செய்யவில்லை. போலீசார் விபத்து வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள். சாட்சிப்பட்டியலில் என் பெயர் உள்ளது. 05.09.2018-அன்று போலீசார் தாக்கல் செய்த சாட்சிப்பட்டியலில் என்னுடைய பெயர் இல்லை என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. விபத்து ஏற்படுத்திய காரின் நிறம் வெள்ளை மற்றும் சிவப்பு ஆகும். வினோத்குமார் ஓட்டி சென்ற வாகனம் நீல நிறம் ஆகும். இரு சக்கர வாகனத்தின் நிறம் கருப்பு மற்றும் காரின் நிறம் வெள்ளை. அதனால், நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காருக்கு எந்த பக்கம் சேதம் அடைந்தது என்பதை பதற்றத்தில் கவனிக்கவில்லை. விபத்து சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் என் உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K.Suresh Kumar
Subordinate Judge,
Avinashi.

**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP.No.78 /2018**

**C/W**

**MCOP No.81/2018**

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | பிரகாஷ்(PW2) | வயது. | 28 |
| த.பெ. | பழனி | தொழில். | தனியார் வேலை |
| முகவரி. | ராமயம்பாளையம், அவிநாசி | | |

**ம.சா.2 முதல்விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ. 19** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

விபத்து குறித்து நான்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் கொடுக்கும் பொழுது நான் சுய நினைவுடன்தான் இருந்தேன். புகாரில் நான் பனியன் கம்பெனியில் டெய்லராக பணிபுரிவதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவில் நான் ஓட்டுநர் வேலை பார்ப்பதாக கூடுதலாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. ஓட்டுநராகவும்தான் பணிபுரிந்து வருகின்றேன். நான் சொல்லும் சங்கதி உண்மையாக இருந்தால், புகாரிலேயே சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் காருக்கு என்ன சேதாரம் ஆகியிருந்தது என்று நான் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்த மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையில், காரின் வலது பக்க டயரிலும், பேனட்டிலும் மட்டும்தான் அடிபட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், அதை நான் பார்க்கவில்லை. விபத்தில் இறந்து போன வினோத் குமார்தான் இருசக்கர வாகனத்தில், 3 நபர்களை விதி மீறி அமர வைத்து அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கி, இந்த விபத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் தவறு. நாங்கள் ஓரமாகவும், மெதுவாகவும் சென்றோம். விபத்து சமயத்தில் எங்கள் நண்பர்கள், எங்கள் பின்னால் வந்துள்ளார்கள். மகேந்திரன் என்பவர் வந்தார். மேற்படி மகேந்திரன் குற்ற வழக்கில் சாட்சியளித்துள்ளார்

என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. விபத்து முழுக்க முழுக்க எங்களுடைய தவறால்தான் ஏற்பட்டுள்ளது, அதனால் 3-ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் இல்லை என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd./- K.Suresh Kumar
Subordinate Judge,
Avinashi.